உளி 1 | ஓசை 43 | செப்டம்பர் - 2020 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



**ஆசிரியர் :** ஜின்னா அஸ்மி

**நிர்வாகக் குழு :**
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
அல்தாஃப் சலீம்

**ஆசிரியர் குழு :**
படைப்பு தேர்வுக்குழுமம்

**வடிவமைப்பு :**
முகம்மது புலவர் மீரான்

**முகப்பு ஓவியம் :**
கமல் காளிதாஸ்



**இணையதள முகவரி :**
www.padaippu.com

**அலுவலக முகவரி :**
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575


படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| அகதா | - 4 |
| கதிரவன் வீ | - 5 |
| பி.கே. சாமி | - 6 |
| சுரேஷ்பாபு ராசேந்திரன் | - 7 |
| பிரபுசங்கர் க | - 8 |
| க. புனிதன் | - 8 |
| வத்திராயிருப்பு தெ.சு. கவுதமன் | - 9 |
| சுசித்ரா மாரன் | - 10 |
| ஜெயாபுதீன் கோவை | - 11 |
| பெனடிக் அருள் | - 12 |
| ஐ. தர்மசிங் | - 12 |
| மதுசூதன் | - 12 |
| சௌவி | - 13 |
| சுஜாதா கண்ணன் | - 14 |
| தி. கலையரசி | - 14 |
| காயத்ரி ராஜசேகர் | - 15 |
| ராம் பெரியசாமி | - 16 |
| சந்துரு | - 17 |
| மாரி கார்த்தி | - 18 |
| இரா. பூபாலன் | - 19 |
| ஜெகன் மா. ஆன்டணி | - 20 |
| ஏ. நஸ்புள்ளாஹ் | - 21 |
| பெருமாள் ஆச்சி | - 22 |
| விஜய்ஆனந்த் | - 23 |
| ஜே. பிரோஸ்கான் | - 24 |
| ச. ப்ரியா | - 25 |
| ஜெ.ஜெ. அனிட்டா | - 26 |
| கவி செல்வா (எ) செல்வராணி | - 27 |
| துரை. நந்தகுமார் | - 28 |
| கருவை ந. ஸ்டாலின் | - 29 |
| த. முருகன் | - 29 |
| ஷெண்பா | - 30 |
| கோதை | - 31 |
| சுப. முத்துக்குமார் | - 32 |
| மா. காளிதாஸ் | - 33 |
| தமிழ்மணவாளன் | - 33 |
| மகேந்திரன்கோ | - 34 |
| கோ. ஸ்ரீதரன் | - 35 |
| கோ. லீலா | - 36 |
| கோவை நா.கி. பிரசாத் | - 36 |
| மு. முபாரக் | - 36 |
| ரிஸ்கா முக்தார் | - 37 |
| ரத்னாவெங்கட் | - 38 |
| லக்ஷ்மி | - 38 |
| சத்யா மருதாணி | - 39 |



**ப**த்து வருடங்களாக குழந்தைபேரிலாத
ராதையும் கண்ணனும் பெர்டிலிட்டி சென்டர்க்கு
சிகிச்சைக்கு சென்றனர்

இருவரது காதலின் நீள அகலங்கள்
ஆராயப்பட்டு
மாதம் 5000 ரூபாய்க்கு மருந்துகளும்
புணர்தலுக்கு முன்
புணர்தலுக்குப்பின் என சிகிச்சையின்
சாஸ்திரங்களும் எழுதப்பட்டன மருந்துச்சீட்டில்

மாதத்தின் இறுதியில் வந்த மாதவிடாயில்
உடைந்துபோன
ராதா இப்போதெல்லாம்
இசையை கேட்பதுமில்லை
கண்ணனும் குழலிசையை வாசிப்பதுமில்லை

கிருஷ்ண ஜெயந்திக்கு வீடுகள்தோறும்
குழந்தையின் பாதங்கள் வைத்து வரையப்பட்ட
அதே அடுத்தமாத சிகிச்சைக்காக
பெர்டிலிட்டி சென்டர் நோக்கி மீண்டும்
பயணித்துக்கொண்டிருந்தது

**அகதா**

## பாடலும் பழியும்



**கா**லர தூக்கி விட்டு கடத்தெரு
போய் வாரேன்னு மாமா கௌம்பும்
போதெல்லாம்
நானும் கை பிடித்து ஒட்டிக்கொள்வேன்

பாடியபடி வரும் மாமன் குறிப்பிட்ட
வீடு வரும் போது மட்டும் குரல் கொஞ்சம்
உயரும்

டீ தண்ணி மாமன் குடிச்சு முடிக்கும்
முன்பே
நாலு சாறு ரொட்டிய முழுங்கி வைப்பேன்

திரும்பும் போது அந்த வளைவி கடையில்
வந்து நிக்கும் அந்த அக்கா

என் கன்னம் கிள்ளி முத்தமிட்டு
நான் அறியவில்லை என்று இருவரும்
பறிமாறிக் கொள்வார்கள்
கடிதத்தை

மாமன் மீண்டும் பாடத்துவங்கும் அந்த
பாட்டு *அந்தி மழை பொழிகிறது ஒவ்வொரு
துளியிலும் உன் முகம் தெரிகிறது..

கொலுசு ஜதியோடு
ரசித்தபடி பின் தொடர்வாள் அந்த அக்கா

சங்கிலியால் பிணைக்கப்பட்டு
திண்ணையில் பைத்திமென்ற
பெயரோடு அமர்ந்திருக்கும்
மாமன்
அந்த பாடல் ஒலிக்கும் திசை நோக்கி
சிரிப்பதை
யாரையோ கட்டிப்போன அந்த அக்கா
அறிந்திருக்க வாய்ப்பில்லை......

◣ **கதிரவன் வீ**

# வேரில்லா_வனம்



**தூ**ரங்களால் இழுக்கப்பட்ட
இரு துளைவழியே சோடாமூடி
தக்கையைப்போல
சுற்றி சுற்றி அறுக்கிறது
வாழ்க்கை.

ஈரமே இல்லாத உன் பார்வையில்
பாலைவனத்தைப் பார்க்கிறேன்.

இரவுக்கும் பகலுக்குமான
இடைவெளியில்
கருக்கலாவே இருக்கிறது
உனக்கும் எனக்குமான காதல்.

தடைசெய்யப்படாத
மனப்போராட்டத்தில்
மறுக்கப்படாத ஆயுதமாய்
உன் மவுனம்.

பிரார்த்தனைகளை
உச்சரிக்கும்
உதடுகளில்
அதிர்கிறது உனதன்பு.

நிழலுக்கு வண்ணமிட
விளக்கிடமா கேட்கவேண்டும்?
வா வந்து துயரத்தை வரைந்துவிட்டு போ.

வேர்கள் மண்ணை
வெறுப்பதில்லை
நீ வேண்டுமானால்
கண்களில் அள்ளி போட்டுவிட்டு போ...

கசக்கிக்கொண்டு நிற்கிறேன்
காலமெல்லாம்....

**பி.கே.சாமி.**

## கலைதல்



**சி**ற்பியின்
விரல் பிணைப்பில்
சுற்றிய பற்றுதலில்
சிறையூண்ட உளியதன்
உச்சந் தலையினை
முகர்ந்து முத்தமிடும்
சுத்தியலின் பெருங்காதல்
அவ்வுளி முனைக்கூரின்
மெல்லிய நெம்புதலில்
சிதறுண்டு தெறிக்கும்
சில்களென்பது
தன் தனங்களின்
பெருவனப்பினை
மென்னிரு கைகளில்
மறைக்கவியலாமல்
நாணி நிலம் நோக்கும்
அப்பெண் சிலைக்கு
ஆடை களைதலென
இருந்திருக்கலாம்.

◣ **சுரேஷ்பாபு_ராசேந்திரன்**



**சா**ளரங்களுக்குள்
நுழையும்
வெளிச்சம் போல
பல வடிவங்களில்
மாறிப்போகிறாய்
என் கைப்பிடித்த பிறகு.

நான் மட்டும்
வெளிச்சமென்ற
இறுமாப்பிலேயே
இன்னமும்
சுற்றி கொண்டிருக்கிறேன்.

என் ஒளிமூலம்
நீயென்பதை
ஒத்துக்கொள்ளாமல்.

**◣ பிரபுசங்கர்_க**

**மா**டு மேய்க்கும் சிறுவன்
கிருஷ்ணன் பதில்
புத்தனாகவும் இருக்கலாம்
கரும்பு சக்கை மேயும்
கட்டெறும்பு
சூழல்
போதி மரம் கண்டுபிடித்தால்
புத்தன் சிலையை வைத்து
தியானிப்பது எளிது

**◣ க. புனிதன்**



**பு**கையும் விறகடுப்பை விசிறிவிட்டு
இரும்புச்சட்டியில் ஆப்ப மாவூற்றி
அத்தனை லாகவமாய் சுழற்றி
வட்டம் விரிவு செய்யும் பாட்டியை
ஆச்சர்யத்தோடு பார்த்த விடியல்...
பணியாரச்சட்டியின் குழிகளுக்குள்
மாவூற்றி நிரப்பி
பதமாய் சிணுக்கரியால் புரட்டி
கொடுத்த எட்டணாவுக்கு
கை நிறைய அள்ளித்தந்த பாட்டி
வாழ்ந்த வீட்டை இடித்துக்கட்டியாச்சு
இப்போதெல்லாம்
நாலணா, எட்டணா தொலைஞ்சுபோச்சு
விறகடுப்பு குறைஞ்சுபோச்சு
இரவு நெடுநேரம் விழித்தலால்
விடிகாலை முழிப்பதே மறந்துபோச்சு
எப்பவாவது வீட்டில் செய்யும்
பணியாரத்தைக் காணும்போதெல்லாம்
அந்த பாட்டி நினைவில் வந்து செல்வார்
“ஒங்க தாத்தாவுக்கு எப்படியிருக்கு?” என
அவள் தெனமும் விசாரிப்பதன் பின்னால்
ஏதேனும் கதையிருக்கலாமென்று
இப்போதுதான் யோசிக்கத்தோணுது...

◣ **வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**



கவராய உளி செதுக்கிய பெயர்கள்
பேசிக்கொண்டிருக்கின்றன

அழிபடா எழுத்துகள்
மரபெஞ்சுகளில் அமர்ந்து பார்த்து
கரும்பலகை ஏறிக்கொள்கின்றன

பிறந்தநாள் சாக்லேட் தாள்களற்ற
திருவோடேந்தி
அணிலும் முயலும் பகிராத வாழ்த்துகளோடு

கனவின் மணியோசைக்கு எழுந்தோடி...எச்சில்
சொட்டும் நாய்களுக்கு
மடிதருகிறது பூட்டிய சத்துணவுக்கூடம்

தன் நூறாண்டு வாழ்வில் காணாத
வெறுமையை பறவைகளிடம் பகிர்கிறது
மைதான வாகை மரம்

மறு அறிவிப்பற்ற
விடுமுறைச் சுமை தாளாச் சுவர்கள்
சுண்ணப்பூச்சுதிர்க்கின்றன

திங்கட்கிழமைகளின் திமிர் குறைந்து போனது

நாற்பதுகளுக்குப்பிறகு எழுதப்படும் குறும்பமை
நினைவுக்குறிப்புகளில் இடம்பெற இயலா
ஏக்கத்தில் தொலைந்து கொண்டிருக்கின்றன
குழந்தைகள் கைவிட்ட பள்ளி வேலை நாட்கள்

◣ **சுசித்ரா மாறன்**



**அ**ப்பாவின் பால்யம்
மக்காச்சோளம் அவித்த
வாசனையுடையது.

அப்பாவின் பால்யம்
காட்டுக்கீரைக் கடைசலின்
பச்சைநிறத்தைப்
பசைபோல விழுங்கியிருக்கிறது.

அப்பாவின் பால்யம்
தாத்தனுக்கு
சாராயம் வாங்க
செருப்பின்றி நடந்திருக்கிறது.

மதியத்தின் ஒரு கரண்டி
ரவை உப்புமாவுக்காக
குழிந்த வயிற்றுடன்
ஆறுமைல் தொலைவிலிருந்த பள்ளிக்கு
நடந்திருக்கிறது.

அப்பாவின் பால்யம்
சீட்டித்துணியிலொரு
சட்டை டவுசருக்காக
வருடமெல்லாம் காத்திருந்திருக்கிறது.

அப்பாவின் பால்யம்
வருடத்தின் இரண்டுநாட்கள் மட்டுமே
இட்லிகளைத் தரிசிக்கிற
கண்களைக் கொண்டிருந்தது.

அப்பாவின் பால்யம்
எட்டணா கூலிக்கு
சைக்கிள்கடை முதலாளியிடம்
ஸ்குரூடிரைவரின் கைப்பிடியால்
புறங்கையில் அடிவாங்கியிருக்கிறது.

அப்பாவின் பால்யம்
சோற்றுக்கு முடிதிருத்தும்
சவரக்கார மாரியின் வருகைக்காக
கரடிபோல முடிவளர்ந்தும்
காத்திருந்தது.

அப்பாவின் பால்யம்
தன் அம்மாவின்
பட்டினியைப் பார்த்தபடி நின்றிருந்த
நாளொன்றில்தான்
பஞ்சம்பிழைக்கத்
திருட்டு ரயிலேறியாவது
பட்டணம்போவதென்று
முடிவெடுத்தது.

◣ **ஜெயாபுதீன், கோவை.**

**எ**ப்படியும் தனக்கென
ஒரு சொந்த வீட்டையாவது
வாங்கிவிட வேண்டும்
என எண்ணும் ஒற்றை நொடி தான்
ஒரு கவிஞனை சாமானியனாய்
மாற்றிவிடுகிறது!

◣ **பெனடிக் அருள்**

**சு**வற்றில் பால் கணக்கு
அழியாமல் இருக்கிறது
அம்மாவின் நினைவுகள்...

◣ **ஐ.தர்மசிங்**



**இ**தில் எதையாவது
வரைந்து பழகச் சொன்னார்கள்
ஒரு பூனையை
ஒரு அணிலை
ஒரு செம்பருத்தியை
ஒரு பவள மல்லிச் செடியை
அருள் பரிபாலிக்கும்
அம்பிகையின் படத்தை...
கை தானாய் வரைந்தது
பணக் கவலையில்
ஒரு நெற்றி சுருங்கிய முகத்தை.
அது அப்படியே
என்னைப் போலிருந்தது.

◣ **மதுசூதன்**



**தொ**லைந்துபோனது என்பதை
ஞாபகத்தில் மறுபடி வரும்போதுதான்
உணர்கிறோம்

அப்பா முதன் முதலாய் வாங்கிக்கொடுத்த
பேனா தொலைந்தபோது
அவ்வளவு அழுகை வந்தது
மனசு தொலைந்துபோன பேனாவோடு
பேசிக்கொண்டேயிருந்தது
இரவில் கனவெல்லாம் தொலைந்த பேனாவை
எடுத்து எழுதிக்கொண்டேயிருந்தது
இன்னமும் அந்தப் பேனா
தொலைந்து போனதாகவேயிருக்கிறது

மறந்துவிடுபவை
மறுபடி ஞாபகத்திற்கு வராதபோது
அவை தொலைந்துபோனவற்றின்
பட்டியலில் இருப்பதில்லை
மறுபடி மறுபடி ஞாபகத்தில் வந்து
மனசு தேடும் ஒன்றே
தொலைந்துபோனதாகிறது

பால்யத்தில் தொலைத்ததெல்லாம்
இன்னும் தொலைந்தவையாகவே இருக்கின்றன
வளர வளர நாம் தொலைப்பவை
குறைந்துவிடுகின்றன
நம் நேசம் குறைந்துவிடுவதால்

பால்யத்தில் ஒரு சிறு பேனாவை நேசித்த நாம்
வளர வளர நேசங்களைச்
சுருக்கிக்கொள்கிறோம்
அல்லது நேசத்தின் அளவு வறன்டுகொண்டே
வருகிறது
ஒரு குளத்தில் தண்ணீர் வற்றுவதைப் போல

நாம் தானியங்களைத் தொலைத்துவிட்டோம்
நதிகளைத் தொலைத்துவிட்டோம்
ஏரிகளைத் தொலைத்துவிட்டோம்
உறவுக்கூட்டங்களைத் தொலைத்துவிட்டோம்


மரங்கள் நிறைந்த நெடுஞ்சாலைகளைத்
தொலைத்துக்கொண்டிருக்கிறோம்
பச்சை வனங்களைத்
தொலைத்துக்கொண்டிருக்கிறோம்
மழையைத் தொலைத்துக்கொண்டிருக்கிறோம்
தென்றலைத் தொலைத்துக்கொண்டிருக்கிறோம்

தொலைப்பதற்கும்
தொலைந்து விடுவதற்கும் சற்றே
வித்தியாசமுண்டு
ஆனால் நாம் தொலைப்பவைகளாலேயே
நாம் தொலைந்துபோகிறோம் இறுதியாக

**சௌவி**

**அ**டைத்து நிற்குமொரு
பிரிவுப் பெருந்துயரை
கண்ணீர் மழையென
கரைத்துத் தீர்த்தபின்
பளிச்சென வெறிச்சென
விரிந்து விடுகிறது
வானப் பெரு மனம்

◣ **சுஜாதா கண்ணன்**



**நா**ற்பது ரூபாய் மல்லிகைப்பூவை
முப்பது ரூபாய்க்கு இறங்கி வந்து
விற்றப்பிறகு...

நன்றிக்கடனாக பக்தன் ஒவ்வொரு பிரகாரமாய்
சுற்றிவந்து வழிபட்டு நிம்மதியாய் திரும்பி
வரும்வரை
அவனின் செருப்புகளுக்கு காவல்
காத்து முடித்து விட்டு...

கோவில் சாத்தும் போது விற்க
முடியாமல் எஞ்சிய உதிரிப்பூக்களை
கொடிமரத்தடியே தினமும்
கொட்டிவிட்டு வணங்கும் பூக்காரிக்கு
பேரம் ஏதும் பேசாமல் அருள்
பாலித்திருக்கலாம் அந்த
கடவுள்.

◣ **தி.கலையரசி.**



**பெ**ரும்பான்மை வெண்மை நிறத்தன
சிற்சில வெந்தய மஞ்சள் நிறத்தன
அரிதாய் சில பச்சையம் பூசியதுபோல
நம்பக்கூட முடியாமல் சில
கத்தரிப்பூ நிறத்தில்
தெளிந்து அழைக்கும்
சன்னமான அலைக்குள் வந்து வந்து
என்னைப்பிடி என்னைப் பிடியென
ஓட்டம் காட்டும்
ஒவ்வொன்றின் பின்னும் உருண்டோடி
கண்ணாமூச்சி காட்டும்
பிஞ்சுப் பாதத்தையொத்ததொன்றைப்
பிடிக்கவென
நுரை மேவிய அலையோடு
மூச்சு முட்ட முட்ட
முத்துக் குளிப்பதாய்
மல்லுக் கட்டுகிறேன்
சன்னதம் பற்றிக் கொள்ள
அவள் எண்ணியதெல்லாம்
கிடைத்துவிடும்
அவள் மூக்கைச் சுருக்கி கொஞ்சலாய்க் கேட்ட
அந்த பிங்க் நிற கூழாங்கல் மட்டும்
அகப்பட்டுவிட்டால்.

**காயத்ரி ராஜசேகர்**



**ம**றக்காமல் இறந்து விடுங்கள்
எப்போதும் போலே
அழுவதற்கு அவர்களிருப்பார்கள்

மறக்காமல் உயிர்தெழுங்கள்
எப்போதும் போலே
ஆர்ப்பரிக்க அவர்களிருப்பார்கள்

இது பிறவியின் கூடு

ஒரு உள்ளங்கையை
மூடிக்கொண்டால் போதும்
திறக்கும் வரை
திறவுகோலை தேடிக்கொண்டிருப்பார்கள்

நேற்றைய சமாதிக்கு பெய்த மழைக்கு தெரியும்
இவன் இறந்துக்கொண்டேயிருப்பது
இவனுக்காக இல்லை
நேற்றைக்காக ...

நிழலை மொய்த்துக்கொண்டிருக்கும்
கொசுக்களுக்காக பின்னப்படுகிற வலை
எல்லா உரையாடல்களின் தொடக்கம்

ஞானம் பெற்றவை விலங்குகள்
அவை அழிக்கும் கற்புகளில்
மனித நேயம்

உண்ணவே முடியாத மீன்களை
வளர்ப்பதும்
உண்ணமுடிந்த மீன்களை வறுப்பதும்
ணீ2 - தீ2 =(ணீ+தீ) (ணீ-தீ)

ஒவ்வொரு செங்கோண முக்கோண
கருப்பையிலும் இருமடியைக்காட்ட
ஆக்சிஜன் செலுத்தும் தாய்மையின்
விதிப்படி ...

மறக்காமல் இறந்து விடுங்கள்
மறக்காமல் உயிர்த்தெழுங்கள்

**ராம் பெரியசாமி**



இலக்கின் தூரம்
குறைவென்றாலும்
நெடுந்தொலைவு பயணிக்கும்
ஒட்டகங்கள் போல்
தாங்கள் கடந்து செல்வது
எளிதல்ல எனத்தெரிந்த பின்
பாலைவனத்தில் பயணிக்காமல்
புறப்பட்ட இடத்திலேயே
நிற்கும் எறும்புகள்
இரவின் வருகைக்கு காத்திருக்கின்றன...
நம்பிக்கையற்று...
இருளின் அடர்த்தியில்
வழி மாறக்கூடுமென்ற
தடுமாற்றத்தில்...
விரைந்துவிட வேண்டுமென்ற
சொப்பனத்தில்...
அனுமதியின்றி
முதுகிலேறிக்கொண்டு
ஏளனமாய் கையசைத்துச் செல்லும்
எறும்புகள்
நடுவழியில்...
ஒட்டகத்தின்
ஒற்றை உடல் சிலிர்ப்பில்
கொதி மணலில் உதிர்ந்து
கருகப்போகும் ஆபத்தை
அறிந்ததாய் தெரியவில்லை...!

◣ **சந்துரு**

# மௌனங்களில் பூக்கும் காதல்



**கா**ற்று வெளியெங்கும்
நிரம்பியிருக்கும் உனது மௌனம்
சிலநேரங்களில் உனது
மிரட்டல் மொழிதனில்-எனை
சுழற்றி அடித்துச் செல்கிறது!
சிலநேரங்களில் உனது
அதட்டல் மொழிதனில்
மெல்லமாக கடிந்து கொள்கிறது!
சிலநேரங்களில் உனது
கொஞ்சும் மொழிதனில்
செல்லமாக கன்னத்தை வருடிச் செல்கிறது!
உனது மௌனத்தை மொழிபெயர்த்துக்
கொண்டிருக்கிறது காற்று
நானோ சுவாசித்துக்
கொண்டிருக்கிறேன் உனது மௌனத்தை!

**மாரி கார்த்தி**



**நீ**ண்ட நாட்களுக்குப் பின்னர்
குறுநகரப் பேருந்து ஓட்டுனர்
அதியதிகாலையிலேயே
பணிமனைக்கு வந்துவிட்டார்
வெகுநாட்களின் பின்னர்
சந்திக்கும் காதலியைப் போல
ஆழமாகப் பார்க்கிறார்
அந்தப் பேருந்தை
பிரகாரத்தை வலம் வருவது போல
பக்தியுடன் ஒரு சுற்று சுற்றி வருகிறார்
நீண்ட நாட்களின் பின்னர்
தனது இருக்கையில்
அமர்ந்தவர்
ஒரு முறை
ஸ்டீரியங்கைத் தொட்டுக் கும்பிட்டார்
அண்ணாந்து
தலைமேல் அமர்ந்திருந்த
இளையராஜாவுக்கு
ஒரு முத்தத்தை நல்கினார்
அவர் அந்த நாளை
இப்படித் துவங்கி வைத்தார்
புத்தம் புதுக் காலை...

**இரா.பூபாலன்**



உடை மாத்தும்
அறை காண்ட்ராக்ட்
சப்பல் ஸ்டாண்ட்
டாஸ்மாக் பார்னு
படிப்படியா பச்சை பிடிச்சதுல
ஊரும் முக்காம முனகாம
சிரிச்சுக்கிட்டே
தர்ம கர்த்தாவாக்கிடுச்சி
இதோ...
வர்ற எலக்க்ஷன்ல
அண்ணனுக்குத்தான் சீட்டுங்கறாங்கஞ்
அதுக்கு இடையில
ஊருக்குள்ள வெயிட்ட
காட்டறதுக்குனே வந்த சான்ஸ்
ஊசிக்காட்டான் சாமி கோவில் கொடை
விடுவாரா அடிச்சி நவுத்திட்டார்லா...
உச்சி கொடை...
சாமிய மயானத்துக்கு அனுப்பிட்டு
சனம் மொத்தம் கோவில்ல
காத்துகிடக்கு
வேட்டை திரும்பும் சாமியை கண்டதும்
இருட்டுல ஓடினத
விரட்டி சாமி வடக்குத்தெருல
மறிச்சிகிட்டு ஓங்குன அரிவாளோட
முக்காட விலக்கினா
வெள்ளையும் சொள்ளையுமா
தர்மமும் கரகமும்...

**ஜெகன்.மா.ஆன்டணி**



**மி**ன்னல் மற்றும் இடியுடன் கூடிய மழை காட்சி
அது

எனினும் வெவ்வேறு
காட்சிகளை உருவாக்கி
கற்பனைக்குள் வாசகனை கொண்டு
வருகிறேன்

எதிர்ரெதிரே நீயும் நானும்
நாற்காலியில் அமர்ந்திருக்கிறோம்
கண்களில் உருவான காம மழை
மெல்ல மெல்ல கீழிறங்கி
கால்கள் வழியாக
ஆயிரம் கை விரல்களால் உன்னை எழுதிப்
பார்க்கிறேன்

இவ்வளவு காலமும்
நீ எங்கு சென்றுருந்தாய் என கற்பனையும்
நீயும் என்னை திட்டுவதன் மூலம்
இந்த சம்பவம் நிஜ உரையாடலுக்கு
வந்துவிடுகிறது

எனினும்,
இன்னுமொரு காட்சியில்
இரண்டு நிழல்கள் நகர்கின்றன
தவளையைப் போல் வாசகன்
கவிதைக்குள் குதிக்கும் நேரம் அது
இந்த சம்பவத்திலிருந்து
நாம் இருவரும் காணாமல் போய்விடுகிறோம்

◣ **ஏ.நஸ்புள்ளாஹ்**



**த**ரிசனம் முடிந்து வந்தவன்
பரபரப்பாகத் தேடுகின்றான்.

சிறிதும், பெரிதும், புதியதும்,
பழையதுமான காலணிகளில்
தன் பொருளைத் தேடுபவனின்
விழிகளிலெல்லாம் கருங்காப்பி நிறம்..

கழட்டி விடப்பட்ட இடத்தைக்
கணித்துக் சுற்றும் முற்றும் பார்த்தாலும்
கண்ணில் தென்படவேயில்லை பாதங்களைத்
தாங்கிய அணிகலன்கள்..

பதறிய உள்ளம் பறிபோன பொருளின்
விலையால் வியர்த்துப் போனது.
பறி கொடுத்தவனின் உள்ளக்குறிப்பை
அறியாதோர் பரிதாபமாகப் பார்க்கின்றனர்.

களவாடியவர்களுக்குச் சாபமிடுவதும்
கடவுளைக் கரித்துக் கொட்டுவதுமாகச்
சாத்தனாக மாறியவனின் மனத்திலிருந்து
காணாமல் போயிருந்தார் கடவுளும்..

**பெருமாள் ஆச்சி**



ஒரு நதியின்
இதயத்தைக்கூறுபோட்டு
மணலையும்..
ஒரு மலையின்
எலும்புகளை நொறுக்கி
ஜல்லிக்கல்லையும்..
ஒரு மரத்தின்
கைகால்களை
முடமாக்கி கதவு
சன்னலையும்
என ஒரு வனத்தைக்-
கொன்று காண்கிரீட்
காடமைக்கிறீர்கள்...

காலிங் பெல்லை
அழுத்துகிறேன்..
குயில் ஒன்று
கூவுகிறது
கொலையுண்ட
வனத்தின் ஆன்மாவாய்..!!

**விஜய்ஆனந்த்**

# காமம்



பனி இரவு
குளிர்ந்த உடலின் மேல்
போர்த்தப்பட்ட தாபப் போர்வை
சிணுங்களும் முணகலுமாக
அறை முழுதும் சிதறி தெறித்துக்கிடக்க
மெல்லிய ஆடையில் நீ
என்னை நெருங்குகிறாயென கனவை நான்
முடித்து வைக்க மனமில்லாமல்
தொடர்கிறேன்.
எதிர் வீட்டு ஜன்னல் வழியே
எரியும் வெளிச்ச குவளையின்
நிழலில் சர்வத்தின் பிணைவு
என் கண்களை பறித்தெடுத்துக் கொண்டு,
ஒரு பறவையாக சிறகடிக்க தொடங்குகிறது
பறவையென்பது காமம்.

**ஜே.பிரோஸ்கான்**

# திரையிடப்பட்ட புன்னகை



எப்பொழுதும் பயணிக்கும்
பேருந்தில் ஏறி ஆயிற்று
நன்கு பரிச்சயமான ஓட்டுனரின்
எதார்தமான சிரிப்பு நீலநிற திரைக்குள்.

முன்னிருக்கை சிறுமியின்
குறுஞ்சிரிப்பு ஒரு பலவண்ண குட்டித்திரைக்குள்.

பூட்டிக்கிடந்த பிள்ளையார் கோவிலில்
பூஜை ஆகிக்கொண்டிருக்கிறது.
பூசாரி தாத்தாவின் பொக்கைவாய் சிரிப்பு காவி
நிறத்திரைக்குள்.

கோவில் வாசலில் பூ விற்கும் அக்கா.
ஒரு முழப்பூவில் இரண்டு இன்ச் சேர்த்தி
வெட்டித் தருகையில் சிரிக்கும் அந்த சிரிப்பு
ஊதா நிற திரைக்குள்.

மளிகை கடைக்காரரின் அவசரசிரிப்பு
அகப்பட்டு கொண்டது.மஞ்சள்நிற திரைக்குள்.

எப்பொழுதும் யாசகம் கேட்டவாறே நிற்கும்.
மனம்பிறழ்ந்த பெண்ணின்.
வெள்ளந்தி சிரிப்பு
அழுக்கு படிந்த ஒரு பச்சை நிற திரைக்குள்.

எப்பொழுதாவது சிரிக்கும்.
அலுவலக மேலாளரின் சிரிப்பு.
வெள்ளை நிற திரைக்குள் இருப்பது குறித்து.
கவலை கொள்ள தேவையிருக்கவில்லை
எனக்கு.

அடிக்கடி சிரித்தவாறே இருக்கும்.
தோழி ஒருத்தியின் உரத்தசிரிப்பு.
அவளது புடவை நிறத்திலேயே இருக்கும்
திரைக்குள்.

இவ்வாறாக சிரிப்பை தொலைத்தவிட்ட
இந்த வாழ்வில்.இன்று நான் கடந்து வந்த
இவர்கள் எல்லோரும்.
என் கருப்பு நிறத்திரைக்குள்
ஒளிந்திருக்கும்.
எனது சிரிப்பு குறித்து.என்ன
நினைத்திருக்ககூடும்.

**ச.ப்ரியா**



**நீ**ங்களெல்லாம் ஒரு கூட்டம்.
என்னைத் திரும்பிப் பார்த்தால்
தரம் தாழ்ந்து விடுவோமோ என்றெண்ணி..
முகத்தை உடலுக்குள் புதைத்து
ஆயாசமாய் அலைகிற கூட்டம்.
கரங்கள் விடுவிக்கிற சொற்களையெல்லாம்
களமேற்றி
இவ்வுலகத்தின் எல்லா திசையிலும்
ஒரே சுமையை கழுவேற்றும்
அற்பக் கூட்டம்.
நானுங்களைக் கணித்தவரை முதுகெலும்புக்
கூரைகளில்
செயப்பாட்டு வினைச் சொற்களால்
தசைநார்கள் பின்னிக் கொண்டவர்கள்.

எனக்கது பிடித்த நிறமாகாது.
எனக்கு நீங்கள்
நினைத்த வரியாகாது.

ஒரே மந்தையின் கொம்புகளில்
நானறிவித்த கட்டளையின் கூர்மை
காணவியலாத பட்சத்தில்..

அதோ நான்
புற்பூண்டுகளின் நடுவே
என் ஒற்றை உயிரை பதுக்கிக் கொள்கிறேன்.

நுனிப் புல் மேய்கிற கவனமென்பது
அரை வயிற்றுக் கவளம்
ஒரு வனத்தின் வயிற்றில்
அமிழ்ந்து கிடக்கும் மரணம்.

**ஜே.ஜே.அனிட்டா**

## நீ ஓவியன்



**நே**ற்று
ஒரு பட்டாம் பூச்சி வரைந்து
அதற்கு என் பெயர் சூட்டினாய்

இன்று
ஒரு சவப் பெட்டி
வரைந்து கொண்டிருக்கிறாய்
பரவாயில்லை

நாளை
நமக்காக ஒரு சொர்க்கத்தையும்
வரைந்துவிடு

**கவி செல்வா (எ) செல்வராணி**

# நுட்பத்தில் நுழைந்து.



ஒன்ஸ்மோர் ஒன்ஸ்மோர் கேட்கிறது
விடுமுறைக்காக கிராமத்திற்கு வந்த
நகரத்தில் வசிக்கும் சிறுமி.

வெள்ளந்திச் சிரிப்பில்
சலிக்காது கற்றுத்தருகிறாள் நுட்பத்தை
தோழிகள் புடைச்சூழ கிராமத்து சிறுமி.

அடுத்தடுத்த முறையிலும்
ஏற்பட்ட பிழையில்
'ஓ மை காடென' நடு நெற்றியில்
பட்டென்று அடித்த ஓசையில்
பறந்தது பூவரச மரக்கிளையில்
இளைப்பாறிக்கொண்டிருந்தப் பறவை.

கற்ற நுட்பம் கைத்தந்ததில்
இறுதியில் சரியாகப்போடுகிறாள்
சா பூ திரியையும்
ஒத்தையா ரெட்டையாவையும்.

**துரை. நந்தகுமார்.**



**தொ**டர்ச்சியாக
அடுக்கப்பட்ட நிலைப்பாடுகள்
பலவும்
தொடர்புடையவனிடம்
போகிற போக்கிலாவது
சென்றெட்டுமா எனும்
கவலையில்லை
மனதோடு சிலாகித்திடும் இவர்களுக்கு....

**கருவை ந.ஸ்டாலின்**

**தே**ர்தல் வருகைக்கு
காத்திருக்கிறது.ஏழைத்தாயின்
கிழிந்த சேலை!

**த.முருகன்**

# பூசைகளற்ற_பொழுதில்



**அ**ப்பாவீட்டு யாகத்துக்கே பேசாம
போயிருக்கலாம் பொழுதே போகாமல்
கொட்டாவி விடுகிறாள் பார்வதி..

அம்மா வீட்டிற்குப் போன வள்ளியும்
தெய்வானையும் வரும் நாளிற்கு
ஆவலாய் காத்திருக்கிறான் முருகன்..

யாரும் வராததை உறுதிப்படுத்தி
அரைமுட்டியை நீட்டி நிமிர்த்தி
ஆசுவாசமாக அமர்கிறான் ஐயப்பன்..

ஊர் சுற்றவில்லை எனினும்
எச்சரிக்கையாக குளிக்கக் கிளம்பிய
விநாயகனுக்கு எட்டவில்லை முதுகு..

குதிரையை அவிழ்த்து விட்டு
கள்ளிறக்கும் தோப்புக்கு காலாற
நடந்து போகிறான் ஐயனார்..

வெறித்த விழியும் துருத்திய
நாக்கும் வலிக்கிறதென கண்ணும்
வாயும் மூடுகிறாள் பத்ரகாளி..

கூழ் குடித்து சலித்துவிட்டதென
சூடானஇட்லி காரச்சட்னி தேடி
தனியே கிளம்புகிறாள் மகமாயி..

எரித்த சாம்பலிலும் கொரோனா
இருக்குமோ என்ற பயத்தோடே
சுடுகாட்டில் ஆடுகிறான் சிவன்..

**ஷெண்பா**



**உ**னது அன்பென்பது...

கண்களில் விழும்
அமிலத்துளி

செவிகளில் இறங்கும்
இடி ஒலி

நாசிகளில் நிறையும்
விஷ வாயு

இதழ்களில் முத்தமிடும்
அரவம்

இதயத்தை பிய்த்து...
துடிப்பை சரி பார்க்கும் அக்கறை

மூளையை செயலிழக்கச் செய்து...
சிகிச்சைத் தரும் மருத்துவம்

இத்தனைக்குப் பிறகும்...
உயிர் மட்டும் பிரியாதெனும் வரம்.

**கோதை**



கீழும் மேலுமாய் ஊரும்
எறும்புகளின் கால்களில் பொடிகின்றன
குளத்தங்கரை ஓரத்தில்
நாம் செய்து வைத்த களிமண் சிலைகள்

காசு வைத்துப்பின்னிய மோதிரத்தின்
வண்ண நரம்பின் பின்னல்கள்
சாயமிழந்து தளர்ந்திருக்கின்றன

நிறைந்திருக்கும் பெட்டியின் அடியில்
மடிப்புக் கலையாத உன் மேலாடை
சாரம் குறைந்த உன் வியர்வ மணத்தோடு

பழகிய தடங்கள்
மங்கலானதின் பெரும்பாரம்
நுகத்தடித் திமில்களில் வதை கூட்டுகிறது

கருப்புப்பறவை கொத்தித் தின்றது போக
மீதி விதைத் தானியங்கள்
வேர்விடக் காத்திருக்கின்றன
முத்தங்களின் ஈரத்தில்

வற்றிய குளத்துச் சேற்றில்
மூச்சைச் சேமிக்கின்றன
கடைசிச் சந்திப்பின் சொற்கள்

நிலம் மூடிய நீர்ப்பாதையின் வெம்மையைக்
கடக்கும் மேகங்கள்
தணிப்பதில்லை

இன்மையை முழுமையாக்க
கொஞ்சம் வலுத்த காற்று
அல்லது
இன்னும் கொஞ்சம் எண்ணெய்யின் ஈரம்

காத்திருக்கிறது
அரசமரத்தடி அகலின் சுடர்.

◣ **சுப. முத்துக்குமார்**



**எ**ன் தோள்பட்டையில் உட்கார்ந்த
மின்மினிப்பூச்சி
தன்னையும் அறியாமல் சிந்திச் சென்ற
ஒரு சொட்டு நிலவொளியில்
நனைந்து கிடக்கிறேன் மொத்தமாக.
உலர்த்துவதாக நினைத்து
என்னை
விரித்துக் காயப்போட்டிருக்கிறது
இவ்விரவு.

◣ **மா. காளிதாஸ்**

**இ**ன்றைய நாள் சிறப்பாக
இருக்குமென்று
யாரோ சொல்லிக் கொண்டிருந்த போது தான்
அலைபேசியில் அழைத்தாய்
அப்புறமென்ன
அவையெல்லாம் மூடநம்பிக்கையென்று
நிரூபிக்காமல் விடுவாயா
என்ன

◣ **தமிழ்மணவாளன்**



**ஆ**ண்பால் விதி
பெண்பால் விதி
என எதுவும் கிடையாது..

ஒரு சில கானங்களில் மாத்திரம்
லயத்து அழுது விடுங்கள்...

ஆனந்தத்தின் மிகுதியில்
அன்பை சொட்டுச்சொட்டாய்க் கூட
சிந்திப் பகிருங்கள்...

எனினும் எக்கணத்திலும்
தோல்விக்கோ துரோகத்திற்கோ
வறுமைக்கோ ஏமாற்றத்திற்கோ
கண்களை அருவியாகவோ
அழுகையின் கருவியாகவோ
அடையாளப்படுத்தி விட வேண்டாம்...

அளவாய் ஒரு சொட்டு
விரலில் நுனியில் எடுத்து
சுண்டித் தெளித்து விட்டுத்தான் சொல்கிறேன்...

போகலாம் வா
உலகம் கிடக்கிறது
வெகுதூரம் பரந்து...

◣ **மகேந்திரன்கோ**



**மா**ங்காயோடு செருப்பு தொங்கிய
தோப்பினில் ,
கிட்டப்பார்வையில்லா
பால்ய கால கூர்மை கண்குறிவைத்து
அடித்து வீழ்த்திய மாங்காயுனூடே
சலசலத்து பறந்துபோன
பிரவுன் கருப்பு நிற இறகும்
சிவப்பிலந்தை கலர்கண்ணுமிருந்த
பறவைக்கு
பெயரை தெரிந்து கொள்ள வேண்டா
அவசரத்தில்
பாக்கெட் மாங்காய்
புடைக்க ஓடியவனுக்கு
முன்னர்
இன்று நிற்கிறது
மாங்கோவ் குரோவ் அபார்ட்மென்ட்ஸ்,
மாணுட என்கவுன்ட்டரிலனான
மாமர வேர்களின் ஜீவ சமாதிக்கு
கல்லறை போல.
அதன் பத்தாவது மாடியில்
பட்டணத்திற்கு பாதை மாறிவந்த
திகைப்போடு
அமர்ந்திருப்பது
அன்றைக்கு
பெயர் தெரியாமல் போய்
இன்றைக்கு காணாமலே போயிருக்கும்
பறவை
செம்போத்தே தான்....

◣ **கோ.ஸ்ரீதரன்**



**அ**வர் யாரெனும்
உங்களின் கேள்விக்கு
கவிஞரென்றேன்...

புரியலையா ? யாருன்னேன்
எனும் கேள்விக்கு
என் நண்பர் என்றேன்

அட ! என்ன ஆளுன்னேன்
எனும் உங்களுக்கு
நல்ல ஆளு என்கிறேன்.

அட என்ன ஆளும்மா நீ
என சபிக்கத் தொடங்கும்
உங்களின் கண் முன்னே

காக்கையும் குருவியும்
என் முற்றத்தில் தானியம்
கொத்தத் தொடங்குகின்றன.

**கோ.லீலா**

**வீ**ழும் விவசாயம்
அமோக அறுவடை
அரசியலில்!

**கோவை.நா.கி.பிரசாத்**

**வீ**ட்டில் ஒரு மரம்
வளர்க்க சொல்கிறாள் மகள்
எதற்காக என காரணம் கேட்டால் பறவைகள்
வரும் என்கிறாள் ,
பறவைகள் வந்தால்
என்னவாகும் என கேட்டால்
எனக்கு சிறகுகள்
கிடைக்கும் என்கிறாள்
சிறகுகள் கிடைத்தால்
என்ன செய்வாய் என கேட்டால்,
நான் தேவதையாவேன் என்கிறாள் ,
நீ பிறந்ததில் இருந்தே தேவதைதான்
என்கிறேன்,
கட்டியணைத்து முத்தமிடுகிறாள் இப்போது
நான் தேவன் ஆகிறேன் !

**மு.முபாரக்**



**யா**ரும் என்னை நேசிக்க வேண்டுமென
எந்த அவசியமுமில்லை..
யாரும் என்னை சகித்துக்கொள்ள
வேண்டுமென
எந்த அவசியமும் இல்லை..

வெளியேறும் வாசல்கள்
திறந்தேதான்
கிடக்கின்றன..

எவரும்
எந்நேரத்திலும்
சொல்லிக்கொள்ளாமல்
வெளியேறலாம்..

அவ்வளவு
எளியதுதான்
எனதிந்த வாழ்வுக்குள்
நுழைவதும்
வெளியேறுவதும்..

வெறுமனே
அன்பினால் ததும்புமொரு
பலவீனமான இதயத்தை
வைத்துக்கொண்டு
என்னால்
என்னதான் செய்ய முடியும்.??

எல்லோரும்
வெளியேறிய பின்பும்
நான்
இங்கேயேதான்
அமர்ந்திருப்பேன்..

இதை விட்டால்
நான் நிற்க
வேறு நிழலில்லை..
இதை நீங்கினால்
நான் பற்ற
வேறு கிளையுமில்லை!!!

**ரிஸ்கா முக்தார்**



**ஆ**யிரம் கேள்விகள்
சலசலவெனக்
காற்றுடன்
அளவளாவும்
உதிர்ந்த சருகுகளாய்
சப்தமெழுப்பிக்
கொண்டிருக்கையில்
மௌனித்திருந்தது
வேர்
பல யுகங்களுக்கு முன்
புதையுண்ட
விதையினை
நினைவு கூர்ந்தே..

◣ **ரத்னாவெங்கட்**

**எ**னக்கென்று யாருமில்லை நாணல்போல
சாய்ந்திருந்தேன்
நானிருக்கிறேன் என்று தோள் கொடுத்தாய்
சாய்ந்து இளைப்பாரினேன்
சிரித்து மகிழ்ந்தேன்
உலகத்தை ஓர் அடியாக நினைத்து
உன்னையே சுற்றிவந்தேன்

என் துன்பங்களை மறந்து
வானத்தில் சிறகடித்து நான் பறக்கையில்

மறந்துவிட்டாய்
தோள் சாய்ந்திருந்த நான் மனம் சரிந்து
சிறகுகள் சோர்ந்து விழுந்துவிட்டேன்

என் எதிர்பார்ப்புகள் ஏதுமில்லை
உன்னிடமிருந்து ஒரு வார்த்தையைத் தேடி
அலைந்து களைத்துக் கொண்டிருக்கிறேன்

நீயுமில்லையே
என்ற நிதர்சனம்
புரிந்தபோது நான்
இறந்துவிட்டேன்
நட்பே
மண்மூடிவிட்ட இதயம்தவிர
இந்தப் பிணத்திடம் இனி என்ன இருக்கிறது

◣ **லக்ஷ்மி**



**மே**கங்களில் வார்த்த புனலம்புகள்
வீதியெங்கும் தத்தி நடைபழகியது மனிதர்களின்
கைப்பிடித்து....

தபால் பெட்டி வாண்டுகள் ஆற்றில்
கரைந்து குதூகளிக்கும் மனதை மேலும்
ஈரமாக்கினார்கள்...

அக்கரையில் பழுத்து உதிர்ந்த நாவல்
பழங்களை பொறுக்கி அதன் சூட்டை
தணித்து அவ்வப்போது பசித்த வயிற்றுக்கு
இரையாக்கினார்கள் முதிர்ந்த பழுத்தல்
கிழங்கள்...

கோவணத்து ஆண்டிக்காய் காவடியாட்டம்
ஆட சந்தணக்கீற்று பாதையாத்திர பக்தர்கள்
ஆயுத்தமாகி கொண்டிருந்தார்கள்..

கனவுகளை தொலைக்காத கல்லூரி படைகள்
இரண்டாம் எண் பேருந்துக்கு புத்தகங்களை
நெஞ்சணைத்தபடியே தூரப்பார்வை பார்த்துக்
கொண்டிருக்கிறார்கள்

ஆழியோர வளைவுகளில் வெகு வேகமாக
கால்தடங்களை நனைக்க அலைகள்
ஆர்வமாய் அலைந்தது..

கன்னத்து கதுப்புகளில் ரோஸ் பவுடரை
அப்பியப்படி ஆறுமாத
அரைக்குடலை நிரப்ப வழிந்த மார்புகளை
இலைமறைவாக காட்சிப்படுத்தினர் வறுமையில்
சிவந்தவர்கள்.....

எலும்பு துருத்திய பெண்கள் தொழில்
படுத்த வேதனையில் விற்பனைக்கான
கோரைப்பாய்களை சுமந்தப்படியே கூடவே
சுமந்தனர் இரைதாங்கிகளை சப்பிய
சிசுக்களை..

மேலுக்கு முடியாத ஆத்தாவை அவசரமாக
பார்க்க மாற்றுச்சேலை சகிதமாய்
ஒயர்க்கூடையில் கருவாட்டுத்தொக்கோடு
பயணமானாள் கோடிவீட்டு ஆனந்தவள்ளி..

அந்த ஆவேச ஆட்கொல்லியாய்
வெகுஜனங்களை கொல்வித்த தொற்றிடம்..
தொடாமல் விலகிய மானுடர்கள் இப்படியாக
கொஞ்சிப்பழக நடமாட ஆரம்பித்துவிட்டார்கள்
ஏதுமற்ற சாமானியர்களாய்...

◣ **சத்யா மருதாணி**

பதிவு எண் : 521/2018

தமிழக காவல்துறை மற்றும்
படைப்புக்குழுமம் இணைந்து நடத்தும்

# மதுவிலக்கு விழிப்புணர்வு குறும்பட போட்டி-2020

## விரைவில்



போட்டி நடுவர்

இயக்குனர் **கே. பாக்யராஜ்**

**பரிசு**

**1,50,000**

காலஅளவு

**8- நிமிடங்களுக்குள்**

கடைசி நாள்

**பின்னர் அறிவிக்கப்படும்**

அனுப்ப வேண்டிய முகவரி

Padaippu Media Networks, #23 Third Floor, Aarthi Arcade,
R.K. Salai, Mylapore, Chennai - 600 004